# கம்போங் கெரிஞ்சியில் பெரிய குழி ஏற்பட்டது



கோலாலம்பூர், ஆக. 28 -
கோலாலம்பூரில் உள்ள கம்போங் கெரிஞ்சி, பந்தாய் பெர்மாயில் சாலையில் பெரிய குழி ஏற்படும் அளவுக்கு கால்வாய் ஒன்று சரிந்து விழுந்திருக்கிறது. அச்சம்பவம் குறித்து கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகம் (டிபிகேஎல்) தகவல் பெற்று நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக, நேற்று செவ்வாய்க்கிழமை பதிவிட்ட ஒரு முகநூல் பதிவில் அது தெரிவித்துள்ளது. "நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை இரவு சுமார் 10 மணியளவில் அச்சம்பவம் நிகழ்ந்தது. அப்பகுதியில் பாதுகாப்பு உட்பட இதர அவசியமான நடவடிக்கைகளை டிபிகேஎல் மேற்கொண்டுவிட்டது" என்றும் அது கூறியது.